## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : D.V. C. No. 6/2024**

**Prosecution Witness : P. W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சோனியா | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 12/01/2026 **(R2 Present. R1,3 absent)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர் தரப்பில்)**

திருமணத்திற்கு பின்னர் தாலி மாற்றும் சடங்கானது 04.05.2020ம் தேதி நடைபெற்றது என்றால் தேதி நினைவில்லை, திருமணமான 3 மாதம் கழித்து நடந்தது. எனது சகோதரி ரேவதி என் திருமண சமயத்தில் எங்கு குடியிருந்தார் என்றால் ஆந்திராவில் மாதர்பாளையம் கிராமத்தில் வசித்து வந்தார். 2010ம் ஆண்டிலிருந்து அங்கு வசித்து வருகிறார். எனது திருமண நகைகள் வாங்க எனது சகோதரி ரேவதி கடைக்கு சென்றார் என்று சொல்லியுள்ளேன் அவருடன் யார் யார் சென்றார்கள் என்றால் எனது சித்தி மற்றும் உறவினர்கள் சென்றார்கள். பாலாஜி, அமுலு, ரதி மற்ற உறவினர்கள் பெயர் தெரியவில்லை. எத்தனை முறைகள் சென்று எனக்காக மேற்படி நபர்கள் நகைகள் வாங்கினார்கள்எ ன்றால் 2 முறை சென்றார்கள். எந்த தேதியில் நகை வாங்க சென்றார்கள் என்றால் தேதி நினைவில்லை. திருமணத்திற்கு முன்னர் சென்றார்கள். அனைத்து நகைகளையும் ஜிஆர் நகைக்கடையில் வாங்கினார்கள் என்றால் சரிதான். ரதி எனக்கு

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

என்ன உறவு முறை என்றால் என் சித்தப்பா மகள் ஆவார். ரதிக்கும் ஜிஆர் நகைக் கடையின் உரிமையாளருக்கும் ஏற்கனவே வியாபாரம் சம்மந்தமாக தொடர்புள்ளது என்றால் சரிதான்.

பிரமாணத்தில் 40சவரன் தங்க நகை எனக்கும் 7 சவரன் எதிர்மனுதாரர்/ கணவருக்கும் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அந்த அளவிற்கான இரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 47 சவரத்திற்கான ஆதாரங்கள் ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் தூக்க மாத்திரை எடுத்துக்கொள்ளும் பழக்கம் உள்ளதா என்றால் தெரியாது. 25.09.2021 அன்று எனது தந்தையின் நினைவுநாளுக்கு எனது பெற்றோர் வீட்டிற்கு செனறு விட்டு 29.09.2021 அன்று தான் கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். நான் வருவது முன்கூட்டியே எனது கணவருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவடி மகளிர் காவல் நிலையத்தில் நடைபெற்ற விசாரணையில் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் நினைவில்லை. அன்று நான் வீட்டிற்கு வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் அவரின் தம்பியின் மகனுக்கு அடிபட்ட தையல் பிரிப்பதற்கு மருத்துவமனை சென்றிருப்பதால் வீட்டில் யாரும் இல்லை என்றால் அவ்வாறு தான் 2ம் எதிர்மனுதாரர் தெரிவித்தார். நான் சென்ற சமயம் வீட்டில் யாரும் இல்லாததால் தான் எனக்கும் 1ம் எதிர்மனுதாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் ஏற்பட்ட பிரச்சனையால் 2ம் எதிர்மனுதாரர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனை சென்று மருத்துவம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது.

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

30.09.2021 அன்று 1ம் எதிர்மனுதாரர் எப்போது வேலைக்கு சென்றார் என்றால் காலை சென்றார் எத்தனை மணி என்று நினைவில்லை. 1ம் எதிர்மனுதாரர் பிலிப்காட்டில் டெலிவரி வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரும் அவரின் சொந்த வேலை காரணமாக அன்று காலையில் சென்றவர் இரவு 7.00 மணிக்கு தான் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று இரவு 7.00 மணிக்கு தான் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வேலைக்கு சென்றுவிட்டு 2 மணி நேர இடைவெளியில் திரும்பி வரக்கூடியவர் அன்று 30.09.2021 எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று எப்போது வந்தார் என்றால் காலையில் சென்றவர் எத்தனை மணிக்கு வந்தார் என்று நினைவில்லை. மதிய உணவுக்கு அவர் வந்தாரா என்றால் தெரியவில்லை.

**வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA